

# நீங்கள் காண முடியாத சுவர்களுக்கு அப்பால்

## முன்கணிப்பிற்கு பதிலாக
## திறந்த மனப்பான்மையுடன் இருக்கும்போது

தாஜி

**யோகாஷ்ரம் ஷாஜஹான்பூர்**
பொன்விழாவை முன்னிட்டு வழங்கப்பட்ட அருட்செய்தி
பொதுக்கூட்டம் 5: 2026 பிப்ரவரி 28 முதல் மார்ச் 2 வரை

# நீங்கள் காண முடியாத சுவர்களுக்கு அப்பால்

## முன்கணிப்பிற்கு பதிலாக திறந்த மனப்பான்மையுடன் இருக்கும்போது

அன்பார்ந்த நண்பர்களே,

ஒவ்வொரு சுவரிலும் வண்ணமயமான கண்ணாடி ஜன்னல்கள் பொருத்தப்பட்ட வீடு ஒன்றினை, ஒருவர் மரபுரிமையாகப் பெறுகிறார். ஒவ்வொரு ஜன்னல் கண்ணாடியும், வெளி உலகை அதனுடைய நிறத்தில் காட்டுகிறது. நீலநிறக் கண்ணாடி வழியாகப் பார்க்கும்போது, தோட்டம் ஒரு சோகமான உணர்வை ஏற்படுத்துகிறது. சிவப்புநிறக் கண்ணாடி வழியாகப் பார்க்கும்போது, அது அச்சுறுத்தும் உணர்வை ஏற்படுத்துகிறது. மஞ்சள்நிறக் கண்ணாடி, அனைத்தையும் பழையதாகவும், பொலிவிழந்துவிட்டதாகவும் காட்டுகிறது. அவர் இந்த வீட்டில் நீண்ட காலம் வாழ்ந்து வருவதால், அந்த ஜன்னல் கண்ணாடிகள் வண்ணம் தீட்டப்பட்டவை என்பதையே மறந்துவிட்டார். அவர் கண்ணாடி வழியாக, தான் காண்பது போலவே இந்த உலகமும் இருப்பதாக நம்புகிறார். பருவகால மாலைப் பொழுதில் வீசிய புயலால், ஜன்னல் கண்ணாடி ஒன்றில் விரிசல் ஏற்படுகிறது. அதனால் ஏற்பட்ட இடைவெளி வழியாக, தான் அறிந்திராத வண்ணங்களை அவர் காண்கிறார்.

அத்தகைய ஒரு வீட்டில்தான் நாமும் வசிக்கின்றோம். நாம் பாரம்பரியமாகப் பெற்ற அந்த வண்ணமயமான கண்ணாடிகளை, ஜன்னல்களில் நாம் பொருத்தவில்லை. அவை நமது குடும்பம், கலாச்சாரம், சமுதாயம் மற்றும் சொந்த அனுபவங்கள் போன்றவற்றால் பொருத்தப்பட்டவை ஆகும். அதனால் ஏற்படக்கூடிய ஆபத்து, அதன் வண்ணங்களில்

இல்லை; ஆனால், ஜன்னல் கண்ணாடிகள் வண்ணம் தீட்டப்பட்டவை என்பதை நாம் மறந்துவிடுவதில்தான் உள்ளது. நமது முன்கணிப்புகளின் வழியாக உலகைப் பார்த்துவிட்டு, அனைத்தையும் சரியாகப் பார்ப்பதாக நாம் நம்பிவிடுகிறோம். முன்கணிப்பு தான் ஆன்மீக வாழ்வின் மிகக்கடுமையான விஷம் என்று பாபூஜி மகராஜ் கூறியபோது, அவர் இந்த நிலையைத் தான் மிகத் துல்லியமாக சுட்டிக்காட்டினார்.

## விவேகம் போன்ற உணர்வைத் தரும் விஷம்

விஷம் என்பது ஒரு சுவாரசியமான சொல். இது, ஒரு உயிருள்ள அமைப்பிற்குள் நுழைந்து, அதை உள்ளிருந்து அழிக்கும் ஒன்றை உணர்த்துகிறது. விஷம் உடலிற்கு தீங்கினை ஏற்படுத்தும் வரை, விஷம் ஏறியுள்ளது குறித்து உடல் அறிவதில்லை. இதுவரை நாம் ஆராய்ந்த எந்தவொரு தடையைக் காட்டிலும், முன்கணிப்பு ஏன் மிகவும் ஆபத்தானது என்பதற்கு இதுவே மிகச்சரியான காரணமாகும். '*நோக்கத்தை விழித்தெழச் செய்தல்*' என்ற அருட்செய்தியில், சோம்பல் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. '*உறுதியான அடித்தளத்தை உருவாக்குதல்*' என்ற அருட்செய்தியில், சந்தேகம் என்பது தெளிவாக உணரப்பட்டது. '*ஆகாயத்தை நோக்கிப் பயணித்தல்*' என்ற அருட்செய்தியில், தன்னையே நேர்மையாகக் காண விரும்புகின்ற ஒருவரால் தனக்குள் தற்பெருமை உணர்வு இருப்பதைக் கண்டறிய முடிந்தது. ஆனால் முன்கணிப்பு? முன்கணிப்பு, பகுத்தறிதல் எனும் மேல்அங்கியை அணிந்துகொள்கிறது. அது உண்மைக்கு துணை நிற்பது போலவும், அனுபவத்தால் கிடைக்கப்பெற்ற விவேகம் போலவும், மிகச் சரியாக மதிப்பிடுவதற்கான முதிர்ச்சியுடன் இருப்பது போலவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது. முன்கணிப்பு செய்யும் ஒரு மனம், தனது கருத்துக்களின் மீது குழப்பம் கொள்வதில்லை, அதை உறுதியாக நம்புகிறது.

தலைசிறந்த அமெரிக்க கல்வியாளரான ஜான் டூயி, எதையும் ஏற்க மறுக்கும் மனப்பான்மையை "மூப்படைவதற்கு முன்னரே பெறுகின்ற அறிவுசார் முதுமை" என்று அழைத்தார். மனம், அதன் வளைந்து கொடுக்கும் தன்மையை இழந்துவிடுகிறது. உண்மையில் புதிதான விஷயங்களை ஏற்றுக்கொள்வதற்கோ, பகுப்பாய்வு செய்வதற்கோ அல்லது அவற்றிற்கு

பதில்வினையாற்றுவதற்கோ அதனால் முடிவதில்லை. அது தனது நம்பிக்கை அமைப்பிற்குப் பொருந்தாத ஒவ்வொரு புதிய மனிதரையும், ஒவ்வொரு புதிய கருத்தையும், ஒவ்வொரு அனுபவத்தையும், நீண்ட காலத்திற்குமுன், தான் உருவாக்கிக்கொண்ட அனுமானங்களின் அடிப்படையிலேயே காண்கிறது. நாம் நிதர்சனத்தைக் காண்பதை நிறுத்திவிடுகிறோம்; மாறாக நிதர்சனம் பற்றிய நமது தனிப்பட்ட கருத்துக்களின் வழியே அவற்றைக் காண்கிறோம். இதன் விளைவாக இரண்டையும் தவறாகவே அணுகுகிறோம்.

## அகங்கார சங்கிலியை வலுப்படுத்தும் முன்கணிப்பு

பாபூஜி மகராஜ் அவர்களின் நுண்ணறிவு, உளவியலைவிட ஆழமானது; அவர் முன்கணிப்பின் மெய்யியல் சார்ந்த விளைவை அடையாளம் காண்கிறார். அவர், முன்கணிப்பானது, ஏற்கனவே இருக்கும் அகங்காரத்தின் சங்கிலியில், மேலும் ஒரு கண்ணியைச் சேர்க்கிறது என்கிறார். இதன் அர்த்தம் என்ன என்பதை ஆராய்வோம். முன்கணிப்புடன் செய்யப்படும் ஒவ்வொரு செயலும், அடிப்படையில், பிரகடனம் செய்வது போன்றதே: *என் கருத்துதான் சரியானது. என்னுடைய குழு தான் சிறந்தது. எனது கண்ணோட்டம்தான் சரியானது*. இது பிறரை மதிப்பீடு செய்வதில்கூட, அடிப்படையில் தன்னைப் பற்றிய ஒரு விஷயத்தை வெளிப்படுத்திக்கொள்வதாகவே இருக்கும். மேலும், அத்தகைய வெளிப்பாடு ஒவ்வொன்றும், அகங்காரத்தின் உறையை மேலும் அடர்த்தியாக்குகிறது. இந்த அகங்காரம் தான், சமுத்திரத்தில் மீண்டும் இணைவதற்கான ஏக்கத்துடன் இருக்கும் நீர்த்துளியை, அதனிடமிருந்து விலக்கிவைக்கிறது.

எனவேதான், பாபூஜி அவர்கள் இத்தகையதொரு அதிர்ச்சியூட்டும் தர்க்கத்தினை முன்வைக்கிறார்: எல்லையற்ற ஒன்றை உணர்தல் என்பது சாத்தியமற்றதாகி விடுகிறது என்கிறார். அது கடினமானதாகவோ அல்லது நிகழ்வதற்கான வாய்ப்பு இல்லாததாகவோ ஆவதில்லை; அது சாத்தியமற்றதாக ஆகிறது. வரையறைகள் உள்ள சுவர்களை எழுப்பி, வரையறைகளற்ற ஒன்றை அடைய முடியாது.

நீங்கள் தனித்திருக்கவேண்டும் என்பதில் உறுதியுடன் இருந்துகொண்டு, பரிபூரணமான ஒன்றுடன் ஐக்கியமடைய முடியாது. தன்னைச்சுற்றி ஒரு எல்லையை அமைத்துக்கொண்டு, அந்த எல்லைக்கு வெளியே உள்ள அனைத்தும் தாழ்ந்தது, தவறானது அல்லது அந்நியமானது என்று பிரகடனம் செய்கின்ற ஒரு உணர்வுநிலையானது, எல்லையற்ற ஒன்றை அனுபவிக்கும் தகுதியை இழந்துவிடுகிறது. இது முற்றிலும் தர்க்கரீதியானது.

## சுவராக மாறிய பாலம்

முன்கணிப்பின் தாக்கத்தினால் மதத்திற்கு என்ன நிகழ்கிறது என்பதே பாபூஜி அவர்களின் பகுப்பாய்வில் சிந்திக்க வைக்கும் பரிமாணமாக இருக்கக்கூடும். மனிதனுக்கும் தெய்வீகத்திற்கும் இடையே ஒரு பாலமாக இருப்பதற்காக உருவாக்கப்பட்ட மதம், ஒரு தடையாக மாறிவிடுகிறது. இணைப்பதற்காக உருவாக்கப்பட்ட ஒன்று பிரிப்பதற்கு காரணமாக மாறிவிடுகிறது. எப்படி? “என்னுடைய மதம் மட்டுமே உண்மையான மதம்” என்ற முன்கணிப்பின் கண்ணாடி வழியாக புனிதமான ஒன்றை நாம் அணுகும்போது, தெய்வீகத்தை உள்முகமாக உணர்கின்ற அனுபவத்தைப் பெறுவதற்கு பதிலாக, மதத்தின் சடங்குகள் மற்றும் வடிவங்கள் மூலமாக வெளிப்புறமாக அணுகுகிறோம். நாம் கலசத்தை வழிபடுகிறோம், அது தாங்கி நிற்கவேண்டிய நீரை மறந்துவிடுகிறோம்.

இது குறிப்பிட்ட ஒரு மரபிற்கு மட்டுமே உரித்தான பிரச்சினை அல்ல. நிலவைச் சுட்டிக்காட்டும் விரலையே, நிலவு என்று தவறாக புரிந்துகொள்கின்ற மனிதர்களிடத்தில் இந்த பிரச்சினை உள்ளது. இது, ஒரு முஸ்லிம் அருகில் அமர்ந்து தியானம் செய்ய மறுக்கும் ஒரு இந்துவின் மனதில் உள்ளது. அனைத்து ஆன்மீக அனுபவங்களையும் ஒரு மாயை என்று ஒதுக்கித்தள்ளும் விஞ்ஞானியின் மனதில் உள்ளது. நாம் மிகுந்த நேர்மையுடன் நம்மை ஆராய்ந்தோமெனில், நாம் இன்னும் ஆராய்ந்திடாத நமது உள்மனதின் ஓரங்களில் இருக்கின்ற, அனுமானங்கள் என்று நாம் முற்றிலும் மறந்துவிட்ட, நமக்கு மிகவும் பரிட்சயமான அனுமானங்களில் அது அமைதியாக வாழ்ந்துகொண்டிருக்கலாம்.

## கண்ணாடியைக் கரைப்பது எது

காலியாக இருக்கும் ஒரு கோப்பை, பெறுவதற்கு ஏற்புடையதாக இருப்பதைப் போன்று, வெறுமையாக இருக்கும் இதயமே அன்பைப் பெறுவதற்கான இடத்தைக் கொண்டிருக்கும். மேலும் அன்பு என்பது நாம் உருவாக்கும் ஒன்றல்ல; மாறாக, சூழல் உகந்ததாக இருக்கும்போது இயல்பாக உதயமாகும் ஒன்றாகும். அன்பு உதயமாவதற்கான வெற்றிடத்தை உருவாக்குவதற்கு, முன்கணிப்பு எனும் ஆழமான வேர் களையப்படவேண்டும். இருப்பினும், இதில் மிகவும் அழகான விஷயம் என்னவெனில், இதன் நேரெதிர் வாக்கியமும் உண்மையே: முன்கணிப்பை உள்ளிருந்து கரைக்கின்ற சக்தியே அன்புதான். பயம் உணர்வுநிலையை சுருங்கச் செய்கிறது; அன்பு அதை விரிவடையச்செய்கிறது. மேலும், முன்கணிப்பு என்பதே, ஆழமாகப் பதிந்துள்ள நம்பிக்கையைச் சுற்றி சுருங்கிய நிலையில் உள்ள உணர்வுநிலைதான். அன்பினால் விரிவடைகின்ற உணர்வுநிலையில் அதனால் நிலைத்திருக்கமுடியாது.

இங்குதான் தியானம் தவிர்க்கமுடியாத ஒன்றாக மாறிவிடுகிறது. எல்லோரையும் நேசிக்கும்படி உங்களையே கட்டாயப்படுத்திக்கொள்ளவும் முடியாது, அச்சம்கொண்டு நீங்கள் திறந்த மனப்பான்மையுடன் இருக்கவும் முடியாது. ஆழ்ந்த பயிற்சியின் அமைதியில், சிந்தனை நிலைபெற்று, மனதின் இரைச்சல் அமைதியடையும்போது, குறிப்பிடத்தக்க ஒன்று நிகழ்கிறது. நாம் அமைத்துக் கொண்ட எல்லைகள் அனைத்தும், நாமே உருவாக்கிக்கொண்டவைதான் என்பதை உணரத் தொடங்குகிறோம். இந்த எல்லைகள் உண்மையானவையோ, நிதர்சனமானவையோ அல்ல, மாறாக அவை வெறுமனே மனத்தின் பழக்கங்கள், எதிர்வினை புரியும் மனப்போக்குகள் மற்றும் ஒருபோதும் கேள்வி எழுப்பாமல் பின்பற்றிவரும் மரபுவழி தீர்மானங்களே என்பதை உணர்ந்துகொள்கிறோம்.

*பிராணாஹுதி* எனும் தெய்வீக பரிமாற்றத்தின் மூலம், மனதின் வரையறைகளுக்கு அப்பாற்பட்ட எல்லையற்ற ஒன்றுடன் நேரடியாக தொடர்புகொள்ளும்போது, இதயம் மென்மையாகிறது. அந்த எல்லையற்ற பிரதேசத்தில்,

முன்கணிப்பிற்கு இடமே இல்லை; ஏனெனில் நாம் அதை எதிர்த்துப் போராடியதால் அல்ல, ஆனால் முன்பு ஆக்கிரமித்திருந்த பிரதேசத்தைக் கடந்து நமது உணர்வுறுநிலை விரிவடைந்துள்ளது என்பதனால். சமுத்திரத்தை அடைந்த ஒரு நதி, முன்பு அது பாய்ந்தோடிய பள்ளத்தாக்கினை எண்ணி கவலை கொள்வதில்லை, ஏனெனில் அது சிறிய பற்றுதல்களால் பாதிப்படையாத அளவிற்கு மிகவும் விரிவடைந்துவிட்டது.

## கண்ணாடியில் ஏற்பட்ட விரிசல்

முன்கணிப்பு, அதைக் கொண்டிருப்பவரை பாதிப்பது மட்டுமின்றி, பிறரிடமும் அது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. மற்றவர்களும் அதை உணர்கின்றனர், குழந்தைகள் அதை உள்ளீர்த்துக்கொள்கின்றனர், மேலும் கண்ணுக்குத் தெரியாத வகையில் அது ஏற்படுத்தும் விரிசல்களால், சமூகங்களும் உடைந்துபோகின்றன. இந்தியா அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுவிட்டது, ஆனால் இன்னும் ஆன்ம சுதந்திரம் அடையவில்லை என்று பாபூஜி அவர்கள் எழுதியபோது, அவர் காலத்தைக் கடந்த ஒரு உண்மையை சுட்டிக்காட்டினார்: உள்முகமாக விடுவிக்கப்படாமல் பெறும் வெளிப்புற விடுதலையானது முழுமையற்றதாகும்.

நமது உள்முக நிலையை ஆராயும் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது. குற்றஉணர்வு என்பது, உணர்வுறுநிலை சுருங்குதல் என்பதன் மற்றொரு வகை என்பதால், குற்றஉணர்வுடன் நம்மை ஆராய வேண்டிய அவசியமில்லை; மாறாக, நேர்மையான ஆர்வத்துடன் சுயஆய்வு செய்ய முயலுங்கள்: “நான் எப்போது கவனித்துக் கேட்பதை நிறுத்தினேன்?”, “ஒரு நபர், ஒரு பாதை அல்லது ஒரு கருத்து பற்றிய புதிய புரிதல் இல்லாமல், அவை எனக்குப் புதிதாக எதையும் வழங்கப் போவதில்லை என்று நான் எவ்வாறு தீர்மானித்தேன்?”, “எனது நம்பிக்கை எனக்கு சௌகர்ய உணர்வினை தருவதால், அது உண்மை என்பதாக எப்போது தவறாக எண்ணத் தொடங்கினேன்?”

மரபுரிமையாக பெறப்பட்ட வீட்டில் இருக்கும் அந்த நபர், தனது ஜன்னல்களை உடைக்க வேண்டிய

அவசியமில்லை. தடையின்றி ஒளி நுழைவதற்கான ஒரு சிறிய இடைவெளி, ஒரே ஒரு விரிசல் மட்டுமே அவருக்கு தேவைப்பட்டது. அந்த விரிசல்தான் ஆன்மீக சுதந்திரத்தின் தொடக்கமாகும்: இது மேலும் நம்பிக்கை தரும் விஷயங்களை சேகரித்துக்கொள்வது அல்ல, மாறாக நமது நம்பிக்கைகளை இறுகப் பற்றிக்கொள்ளாமல் இருப்பதற்கான விருப்பத்தைக் கொண்டிருப்பதுதான், அது எல்லையற்ற உண்மை நம்மை தொடர்ந்து வியப்படையச் செய்யவும், மறுசீரமைப்பு செய்யவும் அனுமதிக்கிறது.

நம்மால் காண முடியாத சுவர்களை தகர்ப்பது எப்போதும் கடினமானது, ஆனால் இந்த முயற்சியை பலன்தரக்கூடியதாக மாற்றக்கூடிய ஒரு ஆழ்ந்த உண்மை இதோ: நாம் அவற்றை வலுக்கட்டாயமாக தகர்ப்பதில்லை. அந்தச் சுவர்களுக்குள் வாழ முடியாத அளவிற்கு மிகப்பெரிதாக நாம் வளர்வதன் மூலமே அவற்றை நாம் கரைத்துவிடுகிறோம். அந்தச் சுவர்கள் கரையும்போது ஏற்படும் வெற்றிடத்தில் ஒரு புதிய இயக்கம் தூண்டப்படுகிறது; அங்கு நீண்டகாலமாக காத்துக்கொண்டிருக்கும் ஒரு பிரசன்னம் வெளிப்படுகிறது. தடைகள் ஒவ்வொன்றிலிருந்தும் விடுபட்ட அன்பு, தனது முழு ஆற்றலையும் தெய்வீகத்தை நோக்கித் திருப்பி, பக்தியாக மாறுகின்ற அந்தத் தருணம் பற்றி அடுத்த அருட்செய்தியில் ஆராய்வோம்.

அன்பு மற்றும் பிரார்த்தனையுடன்,

கம்லேஷ்

*யோகாஷ்ரம் ஷாஜஹான்பூர்*
*பொன்விழாவை முன்னிட்டு வழங்கப்பட்ட அருட்செய்தி*
*பொதுக்கூட்டம் 5: 2026 பிப்ரவரி 28 முதல் மார்ச் 2 வரை*



## தாஜியுடன் தியான வகுப்புகள்

நீங்கள் எப்போது வேண்டுமானாலும் ஹார்ட்ஃபுல்னெஸ் தியானத்தை தொடங்கலாம்! தாஜி வழங்கும் இந்த வகுப்பில் மூன்று பகுதிகள் தொடர்ச்சியாக உள்ளன. இதில், ஹார்ட்ஃபுல்னெஸ் வழிமுறையின் நற்பலன்களையும், உங்கள் அன்றாட வாழ்க்கையில் ஹார்ட்ஃபுல்னெஸ் ஓய்வுநிலைப்பயிற்சி, தியானம், சுத்திகரிப்பு மற்றும் பிரார்த்தனையை எவ்வாறு இணைத்துக்கொள்வது என்பதையும் விவரிக்கிறார். இந்த வகுப்புகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகின்றன.

https://heartfulness.org/global/masterclass/

## ஹார்ட்ஃபுல்னெஸ் பயிற்சிகள்

ஹார்ட்ஃபுல்னெஸ் பயிற்சிகளை கண்டறிந்து - ஓய்வுநிலை, தியானம், சுத்திகரிப்பு மற்றும் பிரார்த்தனையை கற்றுக்கொள்ளுங்கள்.

https://heartfulness.org/in-en/heartfulness-practices/

heartfulness
purity weaves destiny

